செய்தி வெளியீடு எண்:392 நாள்: 24.06.2017

# செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று (24.6.2017) தலைமைச் செயலகத்தில், உயர்கல்வித் துறை சார்பில் சென்னை, டாக்டர் ராதாகிருஷ்ணன் நகர் தொகுதிக்குட்பட்ட, தண்டையார்பேட்டையில் 8 கோடி 48 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள அரசு கலை மற்றும் அறிவியல் (இருபாலர்) கல்லூரிக்கான நிர்வாகம் மற்றும் கல்வியியல் கட்டடங்கள் மற்றும் 25 கோடியே 66 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிக்கான நிர்வாகம் மற்றும் வகுப்பறைக் கட்டடங்களை திறந்து வைத்தார்கள்.

தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளில் உள்ள மாணவ, மாணவிகள் உயர்கல்வி கற்று வேலைவாய்ப்பினைப் பெற்று வாழ்வில் சிறப்பான நிலையை அடைய வேண்டும் என்ற உயரிய நோக்கில், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களால், தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளில், கடந்த 6 ஆண்டுகளில், 4 அரசு பொறியியல் கல்லூரிகள், 45 அரசு / பல்கலைக்கழக உறுப்பு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் மற்றும் 16 அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகள், என மொத்தம் 65 அரசு கல்லூரிகள் துவக்கி வைக்கப்பட்டுள்ளன. இதன் மூலம், மொத்த மாணவர் சேர்க்கை விகிதத்தில் தமிழ்நாடு மாநிலம் 44.3 சதவிகிதத்தைப் பெற்று இந்தியாவிலேயே முதல் இடத்தில் உள்ளது.

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 29.9.2015 அன்று சட்டமன்றப் பேரவையில் விதி 110–ன் கீழ், டாக்டர் ராதாகிருஷ்ணன் நகர் தொகுதியில் ஒரு அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி துவங்கப்படும் என்று அறிவித்திருந்தார்கள். அதன் அடிப்படையில், சென்னை, டாக்டர் ராதாகிருஷ்ணன் நகர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட, தண்டையார்பேட்டையில் ஒரு புதிய அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியை 28.10.2015 அன்று மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் துவக்கி வைத்தார்கள். இந்த அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியானது இதுவரை தற்காலிக கட்டடத்தில் இயங்கி வந்தது.

தற்காலிக கட்டடத்தில் இயங்கி வந்த இப்புதிய அரசு கலை மற்றும் அறிவியல் (இருபாலர்) கல்லூரியில் படிக்கும் மாணவ, மாணவிகள் அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளுடன், சிறந்த கல்விச் சூழலில் கல்வி பயில வேண்டும் என்ற உயரிய நோக்கில், டாக்டர் ராதாகிருஷ்ணன் நகர், தண்டையார்பேட்டை, அரசு அச்சக திட்ட சாலை அருகில் 8 கோடி 48 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்ட அரசு கலை மற்றும் அறிவியல்

(இருபாலர்) கல்லூரிக்கான நிர்வாகம் மற்றும் கல்வியியல் கட்டடங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று திறந்து வைத்தார்கள்.

மேலும், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 25.9.2015 அன்று சட்டமன்றப் பேரவையில் விதி 110–ன் கீழ், பின்தங்கிய பகுதிகளைச் சேர்ந்த மாணவ, மாணவிகள் தொழில்நுட்பக் கல்வி பெற்று வேலைவாய்ப்பு பெற ஏதுவாக அரசு பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரிகள் இல்லாத இடங்களில் 5 புதிய அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகள் துவங்கப்படும் என்று அறிவித்திருந்தார்கள். அதன்படி, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 5.8.2016 அன்று டாக்டர் ராதாகிருஷ்ணன் நகரில் புதிய அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரியை துவக்கி வைத்தார்கள். இந்த அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிக்கான நிரந்தர கட்டடம் டாக்டர் ராதாகிருஷ்ணன் நகரில் கட்டி முடிக்கப்படும் வரை தற்காலிகமாக சென்னை, தரமணியில் உள்ள மைய பலவகை தொழில்நுட்பக் கல்லூரியில் இயங்கி வந்தது.

தற்காலிக கட்டடத்தில் இயங்கி வந்த இந்த அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிக்கு நிரந்தரக் கட்டடம் கட்டும் வகையில், டாக்டர் ராதாகிருஷ்ணன் நகர், தண்டையார்பேட்டை, காமராஜர் சாலை அருகில் 25 கோடியே 66 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்ட அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிக்கான நிர்வாகம் மற்றும் வகுப்பறைக் கட்டடங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று திறந்து வைத்தார்கள்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு மீன்வளம், நிதி, பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் துறை அமைச்சர் திரு. டி. ஜெயக்குமார், மாண்புமிகு உயர்கல்வித் துறை அமைச்சர் திரு.கே.பி.அன்பழகன், பாராளுமன்ற உறுப்பினர் திரு.T.G. வெங்கடேஷ் பாபு, பெரம்பூர் சட்டமன்றத் தொகுதி உறுப்பினர் திரு. பி. வெற்றிவேல், தலைமைச் செயலாளர் முனைவர் கிரிஜா வைத்தியநாதன், இ.ஆ.ப., உயர்கல்வித் துறை முதன்மைச் செயலாளர் திரு.சுனீல் பாலீவால், இ.ஆ.ப., கல்லூரிக் கல்வி இயக்குநர் டாக்டர் ஜெ. மஞ்சுளா மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை – 9.**
**நாள் : 24.6.2017**